# சங்கீத மும்மூர்த்திகளின் உருப்படிகள்

**முனைவர் கு. பிரகாஷ்**

உதவிப்பேராசிரியர் (பணி நிரவல்)

இசைத்துறை

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

**ஆய்வுச்சுருக்கம்**

இசையின் நயங்களையும், இசையின் இனிமையையும், இராகங்களின் சொரூபங்களையும், இசை நுண்மைகளையும் அழிந்து போகாமல் நிலைபெற வைத்திருப்பது இசை உருப்படி வகைகளே ஆகும். சங்கீதக் கலையில் அறிவுபெற அதனைப் பாரம்பரிய முறையில் கற்கிறோம். சங்கீதக் கலையில் திறமை அடையவும் நாம் கற்கும் உருப்படி வகைகளும், இசைக் கச்சேரிகளில் திறமையை வெளிப்படுத்தப் பாடும் இசை உருப்படி வகைகளும், சாஸ்திரீய சங்கீத உருப்படி ஆகும். இசை நயத்தின் இனிமையுடன் இயற்றப்பட்டுள்ள சுவரஜதிகளும், அகார சுத்தம், கற்பனை சுவரம் முதலிய திறமை பெற அடிகோலும் வண்ணம் அமைந்துள்ள தாள வர்ணங்களும் மற்றும் கீர்த்தனை, கிருதி, இராகமாலிகை, இலட்சண கீதங்கள், இராகாங்க இராக லட்சன கீதங்கள் போன்றவை யாவும் சாஸ்திரிய சங்கீத உருப்படிகளே ஆகும். இத்தகைய சாஸ்திரீய சங்கீத உருப்படி வகைகளை நிர்ணயித்து அவைகளை நமக்களித்த முக்கிய வாக்கேயக்காரர்களில் இடம் பெற்றுள்ள தெலுங்கிசையில் சியாமா சாஸ்திரி, தியாகராஜர், முத்துசுவாமி தீட்சிதர் ஆகிய இம்மூவர்களின் இசை உருப்படிகளை பற்றி எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் ஆய்வுச்சுருக்கமாகும்.

**கலைச்சொற்கள்**

1. இராகம் - பண்
2. வர்ணம் - மாலை
3. கீர்த்தனை - பாடல்
4. உருப்படி - இசை வகைகள்
5. வாக்கேயக்காரர்கள் - இயற்றியவர்கள்

**முன்னுரை**

இசை உலகில் எண்ணற்ற இசைக்கலைஞர்கள் படைப்பாளிகளாக இருந்துவந்த நிலையில், சில படைப்பாளிகளே இசைக்கலைஞர்களின் மனதில் முத்திரைப் பதித்தவர்களாக இன்றளவும் திகழ்ந்து வந்துகொண்டிருக்கிறார்கள். அதில் தமிழில் தமிழிசை மூவர் போல தென்னிந்திய இசையில் திருமூர்த்திகளான தியாகராஜர் (1767-1847), முத்துஸ்வாமி தீட்சிதர் (1776-1835), சியாமா சாஸ்திரி (1762-1827) ஆகியோர் அவர்களது கிருதிகளில் தனித்தன்மையுடைய பாணிகளை கையாண்டுள்ளனர். தியாகராஜர் பாணி மிகவும் எளிமையாகவும், அழகுபொருந்தியும் மனதை கவரும் வண்ணமாக, பாமரர் ரசிக்கும் வகையில் அவர் பாணியை கையாண்டுள்ளார். மனித

சமுதாயத்தினர் பொதுவாக பேச வேண்டும் என்ற எண்ணத்துடன் இந்த எளிய பாணியை கையாண்டுள்ளார். இவர் பாடல்கள் ராகபாவம் நிறைந்தவை. மேலும் முத்துசாமி தீட்சிதரின் கிருதிகளில் சுத்த ஸ்வரங்களும், (Plaine Notes) கமகத்துடன் கூடிய ஸ்வரங்களும், கலந்து காணப்படுவது ஒரு சிறப்பம்சமாகும். இவ்வாறு கலந்து காணப்படுவதுதான் மிகவும் ரஞ்சகமாக இருக்கும் என்பதை உணர்ந்து தெலுங்கிசை மூவரும் பாடல்களை இயற்றியுள்ளனர். மூவர் உருப்படிகளையும் இலக்கண நோக்கில், ரஞ்சக அடிப்படையில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**தியாகராஜர் கிருதி**

இவருக்கு பிடித்தமான காலப்பிரமாணம் மத்யம காலப்பிரமாணமாகும். சௌக்க காலத்தில் அமைந்த கம்பீரமான உருப்படிகளையும் இயற்றியுள்ளார். (Ex) ஓ ரெங்கசாமி – ஹாம்போதி.

| | | |
|---|---|---|
| ஏதாவுனரா | - | கல்யாணி |
| சக்கனிராஜ | - | கரகரப்பிரியா |
| ஸ்வரராக சுதா | - | சங்கராபரணம் |

போன்றவை கம்பீரமான பாண்டித்யம் உடைய பாணியை எடுத்துக்காட்டுகின்றன. பெரிய அளவுடைய பல சரண ஸ்வரங்களும் சரண சாஹித்யங்களும் அடங்கிய கனராக பஞ்சரத்னங்கள், பல சரணங்களுடையது. ஆனால் எளிய இசை கொண்ட திவ்ய நாம கீர்த்தனை, உத்சவ சம்ப்ரதாய கீர்த்தனை முதலியவற்றையும் இயற்றியுள்ளார்.

**இசைக்கருவி கீர்த்தனைகள்**

நகுமோமு என்ற கிருதி வாத்யங்களில் அழகாக வாசிக்க கூடிய மற்றும் கேட்பதற்கு இனிமையான உருப்படியாகும். இவ்வாறு இசைத்தரத்திலும், உருப்படியின் அளவிலும் மட்டுமல்ல, சாஹித்யத்தில் அடங்கியுள்ள பொருளிலும் வகைகள் காணலாம். பல உருப்படிகளில் ராமன் மீதுள்ள அன்பையும் மற்றவர்களுக்கு அளிக்கும் வகையும் தனக்கும் தசரதையின் அன்பைத் தரவேண்டும் என்ற கோரிக்கையும், ராமன் அன்பு கிடைக்கவில்லை என்ற வருத்தமும், ராமன் எப்போது தன்னை ஆட்கொள்ளுவார் என்ற எதிர்பார்ப்பும் வெளியிடப்பட்டுள்ளன. இதைத் தவிர சங்கீதத்தின் பெருமையை விளக்கும் வகையில் சங்கீத ஞானமு, தன்யாசி, சங்கீத சாஸ்த்ர ஞானமு (முகாரி) போன்ற பாடல்களையும் எழுதியுள்ளார். மக்களுக்கு நல்ல அறிவுரைகள் வழங்கும் வகையில் தத்துவங்கள் அடங்கிய பரமாத்மா – வாகதீஸ்வரி போன்ற பாடல்களையும் இயற்றியுள்ளார். கிருதிகளில் கிரமமாக வளர்ந்து வரும் சங்கதி என்ற அமைப்பை ராக பாவத்தின் முக்கியத்துடனும் இயற்றிய பெருமை தியாகராஜரையே சாரும். ரஸபாவத்தை பொறுத்தவரை அவரது பாடல்கள் "திராட்சை" எவ்வாறு வாயில் போட்டவுடன் இனிப்பை தருவதாகவும் அது முழுவதும் சாறாக அமைந்திருப்பது போலவும் அவரது பாடல்கள் கேட்ட மாத்திரத்திலேயே "சௌக்யத்தை" கொடுப்பதாக இருந்தது. பாடல் முழுவதும் ராகபாவம் ததும்புவதாகவும் இவருக்கு பின் வந்த வீணை குப்பையர்,

பட்டணம் சுப்ரமணி ஐயர், ராமநாதபுரம் பூச்சி ஐயங்கார் போன்றவர்கள் பாடல்களில் தியாகராஜர் பாணியின் பிரதிபலிப்பை நாம் உணரலாம்.

**முத்துஸ்வாமி தீட்சிதரின் கிருதிகள்**

முத்துஸ்வாமி தீட்சிதரின் பாடல்களின் அமைப்பு ஒரு கம்பீரமான பாண்டித்யமுடைய பாணியில் தான் நாம் பார்க்கிறோம். அநேக இசை அழகுகள் கொண்ட மிகவும் மெருகேற்றிய கடினமான அவரது பாடல்களை இசையில் தேர்ச்சி பெற்றவர்களால் மட்டுமே பாடவோ, வாசிக்கவோ முடியும். பல தடவை கேட்டு உன்னிப்பாக கவனித்த பின்னரே இவரது பாடல்களின் சிறப்பை புரிந்து கொள்ளலாம். சாஹித்யத்தையும், இசையையும் சார்ந்த பல அழகுகளையும், இசையையும் சார்ந்த பல அழகுகளையும் இவர் தனது பாடலில் பயன்படுத்தியுள்ளார். இதற்காக தனது பாடல்களில் காணப்படும் மத்யம கால சாஹித்யம், சௌக்க காலத்திலுள்ள தாதுக்களுக்கு பாடலின் வரவேற்கத்தக்க ஒரு மாறுதலை தருகிறது.

**முத்துஸ்வாமி கிருதிகளில் சில**

முத்துஸ்வாமி தீட்சிதர் வைணிகராக இருந்ததால் இவரது பாடல்களில் வைதீக பாணி காணப்படுகிறது. ரஸ பாவத்தை பொறுத்த மட்டிலும் இவரது பாடல் நாளிகேத ரஸத்துடன் ஒப்பிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| சேத்ர | - | துஜாவந்தி |
| ரஜகோட்னு | - | சாவேரி |
| மீனாட்சி மேமுதம் | - | பூர்வி கல்யாணி |

ஆகியவை சிறந்த உதாரணங்களாகும்.

பல்லவி, சரண அமைப்புடன் கூடிய கிருதிகளைத் தவிர அனுபல்லவி, சரணம் சேர்ந்த சமஸ்டி சரண அமைப்புடைய பல பாடல்களை இவர் இயற்றியுள்ளார்.

(எ.கா.) ஸ்ரீரெங்க நாயக-தன்யாசி

இவரது பெரும்பாலான உருப்படிகளில் அந்நிய பிராஸ அழகு காணப்படுகிறது. இவர் பெரும்பாலான கொத்து கிருதிகளை இயற்றியுள்ளார். கொத்து கிருதிகளில் ஒன்றான நவக்கிரக கிருதிகளில் இவரது ஜோதிடத்தில் இருந்த அறிவை உணரலாம். நவாவர்ணக் கிருதிகளில் தேவி பாஷணைகளையும், பஞ்சலிங்க ஸ்தலங்களில் பஞ்சபூதங்கள் சிவலிங்க வடிவாக போற்றப்பட்டுள்ளது காணலாம். இவ்வாறு இவர் பாடல்களில் சமஸ்கிருதத்திலும், ஆகமங்களிலும், ஜோதிடத்திலும், எல்லாம் இவருக்கு இருந்த ஆழ்ந்த உணர்வை உணரமுடிகிறது. பெரும்பாலும் பாடல்கள் அனைத்தும் சமஸ்கிருதத்தில் அமைந்தவை போற்றப்படும் தேவதை அல்லது கிரகத்தின் பெயர்களையும் சிறப்புகளையும் எல்லாம் கூறி தன்னைக் காப்பாற்ற வேண்டும் என்று ஒரு கோரிக்கையுடன் பாடல்கள் அமைந்துள்ளது. தியாகாராஜர் உணர்ச்சி வசப்பட்டு பாடும் பாடல்களின் உணர்ச்சியின் தன்மையை இவரிடம் காணமுடியாது. அதேப் போல் தியாகராஜர் இறைவனுடன் உரிமையோடு பேசுவது போல் கெஞ்சுவது போல் உள்ள

உணர்ச்சியை இவரிடம் பார்க்கமுடியாது.

**சியாமா சாஸ்திரிகள்**

சியாமா சாஸ்த்திரியின் பாடல்களுக்கு ஒரு தனி அழகும், கவர்ச்சியும் உண்டு. இவர் பாடல்கள் தியாகராஜரின் பாடல்களின் அழகுக்கு எளிமையாகவோ, திட்சிதரின் பாடல் அழகுக்கு கடினமாகவே இருப்பதில்லை. இரண்டிற்கும் இடைப்பட்ட தன்மை கொண்டவை எனவே, இவரது பாடல்கள் ரஸபாவத்தைப் பொறுத்து கதலி வாழைப்பழத்திற்கு ஒப்பிடப்பட்டுள்ளது. பழத்தைச் சாப்பிட்டு தோலை மட்டும் நகர்த்தினால் போதும். தாள அமைப்பில் பல நுட்பமான விஷயங்களை புகுத்துவதில் இவருக்கு ஆர்வம் இருந்தது. ராக பாவத்தின் போக்கிற்கோ, மெட்டிற்கோ பங்கம் ஏற்படாத வகையில், தாளத்தை புகுத்துவதில் எடுத்துக்காட்டாக கீழ்க்கண்ட கீர்த்தனைகளை காணலாம்.

Ex. மீனலோச்சனப்ரோவ – தன்யாசி – சாப்பு தாளத்தில் அநேக உருப்படிகள் இயற்றியுள்ளார். (ex) மரிவேர – ஆனந்தபைரவி

இதைத்தவிர 4 + 3 ல் அமைந்த விலோம சாப்பில் தாளத்தில் அமைத்துள்ளார்.

(Ex) நன்னு ப்ரோவலலிதா – லலிதா

ராகங்களில் இவருக்கு மிகவும் பிடித்தது ஆனந்த பைரவி. ஆனந்தபைரவி ராகத்தை பரிபூர்ணமாக ஆராய்ந்து அதன் அழகுகளை அந்த ராகத்தில் தான் இயற்றியுள்ள பல உருப்படிகள் வாயிலாக அவர் தந்துள்ளார். (Ex) ஓ ஜெகதாம்பா – ஆனந்தபைரவி பெரும்பாலும் உருப்படிகள் தெலுங்கில் அமைந்தவை. காமாட்சி இவரது இஷ்டதேவதை. பல பாடல்களிலும் காமாட்சி அம்மனிடம் தனது குறைகளையும், வேதனைகளையும் யூகித்து தன்னை காப்பாற்றும் வகையில் அமைந்துள்ளார். மீனாட்சியின் பேரில் அமைந்த நவரத்ன மாலிகை கொத்து கிருதிகளும் பைரவி, தோடி எதுக்குள காம்போதி ராகத்தில் அமைத்துள்ளார். (சரணம் மற்றும் சரண ஸ்வரம்) மூன்று ஸ்வரஜதிகளும் இவரது உருப்படிகளில் முக்கியமானது.

**முடிவுரை**

சியாமா சாஸ்திரியின் “பைரவி” ஸ்வர ஜதி சரணங்கள் “ஸரிகமபதநி” என சப்த ஸ்வரங்கள் ஒவ்வொன்றும் கிரமமாக அமையும்படி அமைக்கப்பட்டவை. இந்த ஸ்வரஜதிகள் பாவத்தை துல்லியமாக வெளிப்படத்தும் வகையில் அமந்துள்ளது. மீனாட்சியின் பேரில் அமைந்த நவரத்ன மாலிகை கொத்து கிருதிகளும் பைரவி, தோடி, எதுக்குள காம்போதி ஆகிய மூன்று ராகங்களையும் பெரிய அளவில் அமைத்துள்ளார். மூன்று ஸ்வரஜதிகளும் இவரது உருப்படிகளில் முக்கியமானது “பைரவி” ஸ்வர ஜதி சரணங்கள் ஒவ்வொன்றும் க்ரமமாக அமையும்படி அமைக்கப்பட்டவை. இந்த ஸ்வரஜதிகளில் ராக பாவத்தை துல்லியமாக வெளிப்படுத்தும் வகையில் அமைத்துள்ளது சிறப்பு. இவ்வாறு மும்மூர்த்திகளான தியாகராஜரும், முத்துசாமி தீட்சிதரும், சியாமாசாஸ்திரியும் கொத்துக் கிருதிகள் தங்களுக்கென்று ஒரு பாணியில் தங்களது

பாடல்களில் அமைத்து இசையுலகில் முத்திரை பதித்துள்ளனர் என்றால் மிகையாகாது.

**பார்வை நூல்கள்**

1. தமிழிசைக் கலைக்களஞ்சியம் (1-4) டாக்டர் வீ.ப.க. சுந்தரம், பாரதிதாசன் பல்கலைக்கழக வெளியீடு, திருச்சி, 2003.
2. V. Rajagopalan, The Melodic Garland Biographical Dictionary of Composers and Musician Carnatic Classicals, Chennai, 2000.
3. The Splendour of Music, Dr. P.T. Chelladurai, Vaigarai Puplishers Dindukal.
4. South Indian Music Book 1 to 4, Prof. Sampamoorthy, Madras, 1969.
5. TREASURE of Indian Music, Dr. K.A. Pakiri Sami Bharthi, Chennai, 2012.
6. A Garland, V. Raja Goplan, Biographical Dictionary of Composers and Musicians, Bharatha Vidya Bhavan, Mumbai, 1990.
7. முனைவர் கே.ஏ. பக்கிரிசாமி பாரதி, இந்திய இசைக்கருவூலம், குசேலர் பதிப்பு, நெசப்பாக்கம், சென்னை-78, 2009.